களஞ்சியம் - KALANJIYAM
INTERNATIONAL JOURNAL OF TAMIL STUDIES

# கீழைத்தேயத்தின் இயற்கைவழிப்பட்ட மெய்யியல் தேட்டம்: ஒப்பீட்டு நோக்கில் திருக்குறள் தம்மபதம், தாவோதேஜிங்

**முனைவர் க. ஜவகர்,**

உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, தமிழ்நாடு மத்தியப் பல்கலைக்கழகம், திருவாரூர்

E-Mail : 53 kajawahar@gmail.com

# The Naturalistic Philosophical Quest of Keethathea: A Comparative Perspective on Thirukkural Dhammapada, Tao Tejing

Dr. K. Jawahar,

Assistant Professor, Department of Tamil Nadu, Central University of Tamil Nadu, Tiruvarur

E-Mail : 53 kajawahar@gmail.com

## Abstract

Philosophical research is about knowing something that is the unique basis of a society's knowledge tradition. Art, literature, grammar and culture can be seen to manifest this philosophical trait. The world's artistic and intellectual traditions can be classified thus. Comparison between philosophical elements thus becomes important. In that sense, there are various trends in the Indian philosophical traditions. However, the characteristics of the lower theistic culture, art, knowledge and philosophies are based on nature. Chinese (Shish Singh), Japanese (Manyosu); In India, the ancient literature and knowledge of languages such as Tamil (Sanga literature), Sanskrit (Kalithasa's works), Prakrit (Kathasaptasati), Pali (Dhammapadam) are set in the background of nature. It can be seen that the study methodology of archeological material and the theory of theory etc. are the natural primaries for the application and theorization of grammar.

The Indian philosophical tradition is generally divided into two levels, the Vedic and Avaditika traditions. These establish their knowledge from nature or run through it. In that way, Thirukkural, Dhammapada and Daothejing are among the most important philosophical works. Tiruvalluvar's period was AD. Considered to be the first century. However, people like Marudanayagam compare with Seneca and take it further (Marudanayagam, 2014:74). Studies are carried out. Lao Tzu, who wrote the Tao Tejing in BC. Born in 571, Buddha (Dhammapada) B.C. Also believed to belong to the 5th century. The periodicities, however, converge in their general state. Although Tirukkural

is viewed from a general perspective, it is primarily based on the background of Jain philosophy. Dhammapada Buddhism and Daothejing are philosophical works that presuppose Taoism. All three are situated in different philosophical backgrounds but unite as naturalistic philosophical research projects.

**Keywords;** Thollkappiyam, Noun, Verb, Particle, Adjective, musical Adjective, referential Adjective, attributive Adjective

## முன்னுரை

மெய்யியல் ஆய்வு என்பது ஒரு சமூகத்தின், அறிவு மரபின் தனித்துவமான அடிப்படையான ஒன்றை அறிவதாக அமைகிறது. கலை, இலக்கியம், இலக்கணம், பண்பாடு என எல்லாவற்றிலும் இந்த மெய்யியல் பண்பு வெளிப்படுவதைக் காணமுடியும். உலகக் கலை, அறிவு மரபுகளை இவ்வாறு வகைப்படுத்த இயலும். மெய்யியல் கூறுகளுக்கிடையிலான ஒப்பாய்வு இவ்வாறு முக்கியத்துவம் பெறுகிறது. அந்த வகையில் இந்திய, கீழைத்தேய மெய்யியல் மரபுகளில் பல்வேறு போக்குகள் இருக்கின்றன. அப்படி இருப்பினும், கீழைத்தேய பண்பாட்டு, கலை, அறிவுமரபு, மெய்யியல்களின் பண்பு என்பன இயற்கையை அடிப்படையாகக் கொண்டதாக அமைகிறது. சீன (ஷிழ் சிங்), ஜப்பான்(மன்யோசு); இந்தியாவில் தமிழ்(சங்க இலக்கியம்), சமஸ்கிருதம் (காளிதாசர் படைப்புகள்), பிராகிருதம்(காதாசப்தசதி), பாலி(தம்மபதம்) போன்ற மொழிகளின் பழமையான இலக்கியங்களும் அறிவுமரபுகளும் இயற்கையின் பின்னணியில் அமைவதாக உள்ளன. தொல்காப்பியப் பொருளதிகாரத்தின் ஆய்வு முறையியலும் திணைக்கோட்பாடு முதலிய பார்வைகளும் இலக்கணப்பனுவலாக்கத்திற்கும் கோட்பாட்டாக்கத்துக்கும் இயற்கை முதன்மையாக அமைவதைக் காணமுடியும்.

இந்திய மெய்யியல் மரபில் வைதீக, அவைதீக மரபு என்று இரு நிலைகளில் பொதுவாகப் பகுப்பர். இவைகள் இயற்கையிலிருந்து தனது அறிவுமரபை நிறுவுகின்றன அல்லது இவற்றைக் கடந்தும் இயங்குகின்றன. அந்தவகையில் கீழைத்தேய மெய்யியல் பனுவல்களுள் முக்கியமானவைகளுள் திருக்குறளும் தம்மபதமும் தாவோதேஜிங்கும் அமைகின்றன. திருவள்ளுவரின் காலம் கி.பி. முதல்நூற்றாண்டாகக்

கருதப்படுகிறது. ஆயினும் மருதநாயகம் போன்றோர் செனகாவுடன் ஒப்பிட்டு இன்னும் முன்னுக்குக்கொண்டு செல்கின்றனர்(மருதநாயகம், 2014:74). ஆய்வுகள் கொண்டுசெல்கின்றன. தாவோதேஜிங்கை எழுதிய லாவோட்சு கி.மு. 571 பிறந்தவராகவும், புத்தர் (தம்மபதம்) கி.மு. 5ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவராகவும் கருதப்படுகின்றனர். காலவேறுபாடுகள் இருப்பினும் இல்லையென்றாலும் இவற்றின் பொதுக்கூறு நிலையில் ஒன்றிணைகின்றன. திருக்குறள் பொதுநிலையில் இருந்து பார்க்கப்பட்டாலும் அது சமண மெய்யியல் பின்னணியில் இருந்து அமைகிறது என்பது முதன்மையானது. தம்மபதம் பௌத்தத்தையும் தாவோதேஜிங் தாவோயிசத்தையும் முன்மொழியும் மெய்யியல் பனுவல்களாக அமைகின்றன. இவை மூன்றும் வெவ்வேறு மெய்யியல் பின்னணியில் அமைந்தவைகளாயினும் இயற்கைவழிப்பட்ட மெய்யியல் தேட்டப் பனுவல்களாக ஒன்றுபடுகின்றன.

**சமகாலப் பொருத்தப்பாடு**

மனித இனம் இன்று தம்மை மட்டுமே முதன்மையாகக் கருதிக்கொள்வதும் தொழில்நுட்பங்களினூடாக இயற்கையை நுகர்வாக்கிச் சிதைப்பதுமெனப் பல நிலைகளில் ஆதிக்கம் செலுத்திவருகிறது. மனிதருள்ளும் சாதி, மதம், பாலினம், நிறம், உடல், மொழி எனப் பலவித ஏற்றத்தாழ்வுகள் நீடிக்கின்றன. இவற்றையெல்லாம் கடந்தியங்கும் நிலையில் புதிய கோட்பாடுகள், அறிவு மரபுகள் இன்று அமைந்தாலும் அவைகளுக்கெல்லாம் அடிப்படையான கூறுகளாக தொடக்ககால மெய்யியல் பார்வைகள் அமைகின்றன. அவற்றுடனான காலந்தோறும் தொடர்ந்த உரையாடல்களினூடாகவே இன்றைய புதிய கோட்பாடுகள் வருகின்றன. எனவே, அவற்றின் முக்கியத்துவம் இன்றைய நோக்கில் உலகநிலைப்பட்ட பார்வையில் அணுகப்படவேண்டிய தேவை இருக்கிறது. இதன்மூலம் உலக மெய்யியல் மரபுகளுக்கிடையிலான ஆக்கபூர்வமான உரையாடலை மேற்கொள்ள இயலும். அந்த வகையில் கீழைத்தேய மெய்யியல் மரபுகளுக்கிடையிலான உரையாடலை நிகழ்த்துவதன்மூலம் பொதுக்கூறுகளைக் கண்டறிய முடியும்.

இவ்வாறான நிலையில் நோக்க, கீழைத்தேய மெய்யியல், கலையியல், சமூகவியல், பண்பாட்டியல் மரபுகள் இயற்கையை மையமாகக் கொண்டும்,

அதன் வழிப்பட்ட நெறியையுமே முன்னிலைப்படுத்துவதாக அமைகின்றன. இலக்கியங்கள், மெய்யியல் மரபுகள் இவற்றிற்கு ஆகச்சிறந்த சான்றுகளாக அமைகின்றன. இப்பண்புகளையே கீழைத்தேயத்தின் தனித்துவ மரபாக ஜார்ஜ் ஹார்ட் போன்றோர் முன்வைக்கின்றனர். அந்த வகையில், கீழைத்தேய மெய்யியல் ஒப்பாய்வு முக்கியத்துவமுடையதாகிறது.

சூழலை அடிப்படையாகக் கொண்ட மெய்யியல் பார்வை (Eco-Philosophy) மேலோங்கிவரும் இன்றைய சூழலில், இயற்கையை மையமிட்ட கீழைத்தேய மெய்யியலின் ஒப்பியல் பார்வை முக்கியத்துவமுடையதாகிறது. இந்நிலையில், இந்த மூன்று பனுவல்களும் கீழைத்தேயத்தின் இயற்கைவழிப்பட்ட மெய்யியல் தேட்டத்தின் சான்றுகளாக அமைகின்றன.

**கீழைத்தேயத்தின் இயற்கைவழிப்பட்ட மெய்யியல் தேட்டப்பனுவல்கள்**

திருக்குறளும் தம்மபதமும் தாவோதேஜிங்கும் இயற்கை, உயிரினங்களின் இயக்கம், செயல்பாடுகளில் இருந்து தத்தமது மெய்யியல்மரபுகளை முன்வைக்கின்றன. இது இவைகளுக்கிடையில் அடிப்படைப் பொதுக்கூறாக அமைகிறது. அந்தவகையில், இயற்கையை அடிப்படையாகக் கொண்ட மெய்யியலாக்க நிலைகளை,

அ. நிலவியல் தொகுதி

ஆ. உயிரியல் தொகுதி

என்று, இரண்டு நிலைகளில் பகுக்கலாம். இவற்றுள் நிலவியல் தொகுதியுள், நிலம், நிலத்தோடு சேர்ந்து அதனுடன் தொடர்புடைய நீர், காற்று முதலிய பஞ்ச பூதங்களும் அவற்றின் பகுதிகளும் அமைகின்றன. உயிரியல் தொகுதியுள் தாவரம், விலங்கு, பறவை போன்றனவும் வகைப்படுத்தப்படுகின்றன.

**அ. நிலவியல் தொகுதி (Geographical unit)**

திருக்குறளும் தம்மபதமும் தாவோதேஜிங் இம்மூன்று மெய்யியல் பனுவல்களிலும் நிலவியல் தொகுதிகளான நிலம், நீர், வெளி ஆகிய மூன்றும் உயர்வு நிலையிலேயே பார்க்கப்பட்டு அவற்றின்வழி மெய்யியல்களை முன்வைக்கின்றன.

**நிலம்**

நிலம் என்ற பகுப்பில், இயற்கை, நிலம், பள்ளத்தாக்கு, மலை, பாறை முதலியவைகளினூடாக மெய்யியலாக்கங்கள் அமைகின்றன.

இயற்கை இயல்பானது. அந்த இயற்கை உயர்வானது இந்நிலையை அடைதல் என்பது மனித வாழ்வின் உயர்ந்த பேறாக மெய்யியல்மரபில் கருதப்படுகிறது. ஆசையே அனைத்துத் துன்பங்களுக்கும் வன்முறைக்கும் காரணமாகிறது. அதை நீக்குவதே உயர்ந்த நிலை. எனவே ஆசையை அறுத்தல் என்பது பேரா இயற்கை நிலையடைதல் என்பதை,

ஆரா யியற்கை அவாநீப்பின் அந்நிலையே
பேரா வியற்கை தரும் (குறள் 370)

என்கிறது திருக்குறள். நிலம் பொறுமைக்குச் சான்றாகிறது எனக்கூறுகின்றன திருக்குறளும் தம்மபதமும்.

அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வாரைப் பொறுத்தல் தலை (குறள்152)

என்று பொறுமைக்குணத்தின் உயரிய பண்பை நிலத்தின் தன்மையிலிருந்து முன்மொழிகிறது. தம்மபதமும் இவ்வாறே கூறுகிறது.தம்மபதம் (அர்ஹந்த வர்க்கம்: 6). பள்ளத்தாக்கு தாவோவிற்கு இணையாகத் தாவோதேஜிங் கூறுகிறது.

உலகத்துக்குத் தாவோ இருக்கிறமாதிரி
நதிகளுக்கும் கடல்களுக்கும்
ஓடைகளும் பள்ளத்தாக்குகளும் இருக்கின்றன்
நதிகளும் கடல்களும் பள்ளத்தாக்குகளுக்கு
மன்னர்களாக இருக்கமுடியும்
ஏனென்றால்
நதிகளும் கடல்களும் பள்ளத்தாக்குகளுக்குத்
தங்களைத் தாழ்த்திக் கொள்ளமுடியும்
இவ்வாறு
நதிகளும் கடல்களும் பள்ளத்தாக்குகளுக்கு
மன்னர்களாக ஆகின்றன. (தாவோதேஜிங். பக்கம் 89)

பள்ளத்தாக்கு - ஓடை - தாவோ மூன்றும் சமநிலையில் வைத்து முழுமையின் குறியீடாக முன்வைக்கப்படுகின்றன. கடல், நதி, மன்னர் மூன்றும் குறைபாடுகளுக்குக் குறியீடாகின்றன. கடலும் நதியும் தம்மைத் தாழ்த்தி உயர்வடைவதைப்போல மன்னரும் தன்னைத் தாழ்த்திக் கொள்ள வேண்டும். அப்போதுதான் அவர் இயற்கையின் பகுதியாக மாறி அதனினும் மேன்மையடைபவராக உயர்வார். இங்கு இயற்கையிலிருந்து மெய்யியல் தேட்டம் முன்மொழியப்படுகிறது. வள்ளுவரும் பேரா இயற்கையென்று இதையே குறிப்பிடுகிறார். இயற்கையின் நியதிகளைப் பின்பற்றும் நிலையில் தாவோவும் இயற்கையும் ஒன்றாகின்றன(தாவோதேஜிங். 37).

**மலை - பாறை - குன்று**

மலை, குன்று, பாறை உயர்வின், வலிமையின் பண்புகளாகக் கருதப்பட்டு மனித மேன்மையை நோக்கி நகர்த்துவனவாக முன்வைக்கப்படுகின்றன. பொறிகளின் வழியாகச் செல்லாது அறத்தின் வழியாக தன் நிலையிலிருந்து மாறுபடாது உறுதியாக இருப்பவரின் உயர்வானது 'மலையினும் மாணப்பெரிது'(குறள் 124) எனக் கூறுவதோடு, குன்றைப்போல் உயர்ந்தவராயினும் தீய செயல்களைச் செய்யின் தாழ்வடைவார்கள்'(குறள் 965) என்று மொழிகிறது. தம்மபதம், மலையை உயர்வாகக் கருதி, 'ஞானத்தின் வழியில் இருப்பவர் மலை உச்சியில் இருந்து காண்பவர்'(தம்மபதம், அப்பிரமாதவர்க்கம்: 8) என உயர்த்திக் கூறுவதோடு,

"கற்பாறை சூறாவளிக் காற்றுக்கும் அசையாதிருப்பதுபோல,
அறிஞர் புகழ்ச்சிக்கும் இகழ்ச்சிக்கும் அசைய மாட்டார்கள்"
(தம்மபதம், பண்டிதவர்க்கம்: 6)

என அறிஞர்களின் வலிமைக்குப் பாறையை உவமித்து மொழிகிறது. இரண்டு நூல்களும் மலையை உயர்வான நிலையில் முன்வைத்து மனித மேன்மைக்கான எல்லைகளாகக் கூறுவதோடு பாறையை வலிமையின் சாட்சியாக்குகின்றன. இவ்வாறு இயற்கை, நிலம், மலை, குன்று, பாறை முதலிய மாறாத தன்மையுடைய நிலவியல் இயல்புகளை அறத்தின், ஞானத்தின் வழியில் இருப்பவர்கள் தம் கொள்கையில் இருந்து மாறாமல் இருக்கிறார்கள் எனக் கூறி, மனிதப் பண்பை இயற்கை நிலைக்கு

உயர்த்துகிறது. அதாவது இயற்கையின் பண்புநிலைக்கு மனிதர் மேன்மையடையவேண்டும் என்பதை மூன்று பனுவல்களும் வலியுறுத்துகின்றன.

**நிலம் : இயற்கை, நிலம், பள்ளத்தாக்கு, மலை, பாறை, நீர்நிலை**

கீழைத்தேயப் பண்பாட்டில் நீர் மிக உயர்ந்த பண்பாகக் கருதப்படுகிறது. ஞானத்தின், பேரறிவின் , மேன்மையின், புனிதத்தின் வடிவமாக முன்வைக்கப்படுகிறது. அந்த வகையில் நீரின் இயல்பு, மழை, குளம், ஊருணி, மணற்கேணி முதலிய நிலைகளில் மெய்யியல் தேட்டங்கள் முன்மொழியப்படுகின்றன. திருக்குறளில் எல்லாமுமாகி நிற்பது நீர், மழையெனக்கூறி, வான்சிறப்பு எனத் தனி அதிகாரத்தையே கூறுகிறது.

நீர் எல்லாவற்றுக்கும் அடிப்படையாக இருப்பதோடு மென்மையும் வலிமையும் தூய்மையும் உடையதாக இருக்கும் நிலையில், அதன் பண்பாட்டுத்தளம் மேன்மை, உயர்வு, வலிமை, ஞானமுதிர்வு எனப்பல நிலைகளில் பனுவல்களில் முன்வைக்கப்படுகிறது. 'மழை எவ்விதக் கைமாறும் இன்றி உதவுகிறது, அதைப்போல் ஒப்புரவுடையோர் இருப்பர் என்கிறது' (குறள்.211).

நீர்மையுடையாரை உயர்ந்தோர் எனக்கூறும் திருக்குறள் (195), 'உணர்வுடையவர்கள்முன் சொல்லுதல் என்பது பாத்தியுள் நீர் சொரிவதைப் போன்றது' (718) என்கிறது. தம்மபதமும் நீரை உயர்வாகக் கருதும் அதே நேரத்தில், 'நீர்க்குமிழியை உடல் நிலையாமைக்குச் சான்றாக்குகிறது' (தம்மபதம், புஷ்பவர்க்கம்: 3).

தாவோதேஜிங்கோ நீரை மிகவும் உயர்ந்த ஞானத்தின் வடிவமாகவே காண்கிறது.

"வலுவின்மையிலும் நெகிழ்விலும்
நீருக்கு ஒப்பாக எதையும் சொல்ல முடியாது
என்றாலும்
வலியதையும் கடினத்தையும் தாக்குவதில்
நீருக்கு நிகராக எதுவுமில்லை

ஏனென்றால் நீருக்கு மாற்று எதுவுமில்லை" (தாவோதேஜிங், ப. 103)

என நீர் மென்மையும் நெகிழ்வும் கொண்டிருப்பதோடு மிக வலிமையாகவும் இருக்கிறது எனக் கூறி, 'தே' நீரைப்போல் எல்லாமுமாகி இருக்கிறது என்கிறது. இங்கு இயல்பு, முழுமை, எல்லாமுமாகி நிற்கும் நிலை எனப்பல நிலைகளில் முன்வைக்கப்படும் தாவோயிசத்தின் 'தே'வுக்கு நீரின் இயல்பு முன்மொழியப்படுகிறது. நீரின் இயல்பு ஞானத்தின் தேவின் உன்னதநிலையாகிறது.

'ஊருணி நீரைப்போல பேரறிவாளனின் செல்வம் அமைய வேண்டும்'(குறள் 215), என பேரறிவாளனை ஊருணி நீராக மனிதப்பண்பிலிருந்து இயற்கையின் பண்பிற்கு உயர்த்துகிறது. அதைப்போல 'மணற்கேணியைப்போல்' அறிவு கற்கக் கற்க மேன்மையடையும் (396) என கற்றலின், ஞானத்தேடலின் மேன்மைக்கு உவமிக்கிறது. தம்மபதம்,

> "ஆழமான குளத்தில் இருக்கிற மாசற்ற தெளிந்த நீரைப்போன்று, தர்ம உபதேசங்களைக் கேட்பதினாலே அறிஞர் மிகவும் தூய்மையடைகிறார்கள்" (தம்மபதம், பண்டிதவர்க்கம்: 7)

என குளத்து நீரின் தெளிவு ஞான முதிர்வுக்கு உவமையாகிறது. இவ்வாறு மூன்று மெய்யியல் பனுவல்களிலும் நீர் மிகவும் உயர்ந்த நிலையில் கருதப்படுவதோடு நீரின் இயல்பை அடைவதே ஞானத்தின், பேரறிவின் எல்லையாகிறது என்ற கருத்தே மேலோங்கி இருக்கிறது.

**வெளி - நிலவு, விண்மீன்**

திருக்குறள் அறிவுடையவர்களின் நட்பை,

> நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்
> பின்நீர பேதையார் நட்பு (782)

வளர்பிறையென்றும், பேதையர் நட்பைத் தேய்பிறையென்றும் கூறுகிறது. தம்மபதம், 'அறிவுடையவர்கள் வழியில் செல்வது, விண்மீன்கள் வழியில் செல்லும் நிலவைப்போல எனக்கூறுவதோடு' (தம்மபதம், ஸுகவர்க்கம்: 9), 'புத்தரின் உபதேசங்களில் மனத்தைச் செலுத்தும் பிக்கு, மேகத்திலிருந்து நீங்கி வெளிப்படும் வெண்ணிலவைப்போல ஒளிர்கிறார்'(தம்மபதம், பிக்குவர்க்கம்: 23)

எனக்கூறுகிறது. இவ்வாறு விண்மீன்களும் நிலவும் அறிவின், ஞானத்தின் எல்லைகளாக முன்வைக்கப்படுகின்றன.

இவ்வாறு நிலவியல் தொகுதிகளாகிய நிலம், நீர், வெளி ஆகிய மூன்று கூறுகளிலும் இயற்கை பெரும்பகுதி, உயர்வான நிலைகளிலேயே முன்வைக்கப்பட்டு அதன்வழிப்பட்ட மெய்யியல் தேட்டங்கள் மூன்று பனுவல்களிலும் அமைகின்றன. நிலவியல் தொகுதிகள் பெரும்பகுதி, உயர்வான நிலையிலேயே மூன்று பனுவல்களிலும் முன்வைக்கப்படுவதற்கு அவற்றின் மாறாத தன்மையையே முதன்மையான பண்பாக மெய்யியலுக்கு அடிப்படையாக எடுத்திருக்கின்றன எனக்கூறமுடியும். இந்த நிலையில் இம்மூன்று மெய்யியல் பனுவல்களிலும் இயற்கைவழிப்பட்ட மெய்யியல் ஒத்திசைவு இருப்பதை அறிய முடிகிறது.

ஆ. **உயிரியல் தொகுதி (Biological unit)**

நிலவியல் தொகுதி முழுவதும் உயர்வு நிலையில் இருப்பதைப்போல உயிரியல் தொகுதிகள் அமையவில்லை. அதற்குக் காரணம், இந்த உயிரியல் தொகுதியுள், நிலைத்திணையான (Fauna) தாவர இனமும், இயங்குநிலைத்திணையான(Flora) விலங்கு, பறவை முதலியனவும் நிலவியல் தொகுதியின் சார்புநிலையில் இயங்குகின்றன. எனவே இவை முதல்நிலைகளாகக் கருத இயலாது. மாறும் இயல்புகளை உடையனவாக இருக்கின்றன. அதைப்போலவே மனிதப் பயன்பாட்டோடு நெருங்கிய தொடர்புடையதாகவும் இருக்கின்றன. ஆகவே இந்த உயிரியல் தொகுதிகள் உயர்வு, தாழ்வு என இருநிலைகளிலும் மெய்யியல் பொருண்மையில் அமைகின்றன. அந்த வகையில் தாவரம், விலங்கு, பறவை முதலியன மெய்யியலாக்கத்தில் முதன்மையாக உள்ளன.

**உயர்வு**:

உயிரினத்தொகுதியுள் உயர்வாகத் தாவர இனங்களும் விலங்கு, பறவை முதலியவைகளும் அமைகின்றன.

**தாவர இனம்**

'வெள்ளத்தின் அளவை ஒட்டி மலரின் நீட்டம் அமையும் என்பதிலிருந்து, ஊக்கத்தின் அளவைப் பொறுத்து உயர்வு அமையும்'(குறள். 595) என்கிறது. இங்கு வெள்ளம், நீர் இரண்டின் அளவீடுகள் ஊக்கத்திற்கு அளவீடுகளாக இடம்பெயர்க்கப்படுகின்றன.

"பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயனுடை யான்கண் படின்" (குறள்.216)

என, ஒப்புரவாளரிடத்தில் உள்ள செல்வம் ஊர்நடுவே உள்ள பயன்தரும் பழுத்த மரம்போல என மொழிகிறது திருக்குறள். அதைப்போலவே, 'மருந்து மரம்போல ஒப்புரவாளனும் முழுமையாக எல்லோருக்கும் பயன் தருவான்' (குறள் 217) என்கிறது. இங்கு ஒப்புரவுடையோர் மரமாக உயர்த்தப்படுகிறார். மரமாக மாறுவது உயரிய பண்பாகிறது. தம்மபதம், 'மல்லிகைச்செடி வாடிய பூக்களை உதிர்ப்பதுபோல, பிக்குகள் ஆசையை உதிர்க்க வேண்டும்' (தம்மபதம், பிக்கு வர்க்கம். 18) என்கிறது.

"சந்தனம், தகரம், தாமரை, மல்லிகை முதலிய எல்லா மணங்களை விட அறிஞருடைய நறுமணம் சிறந்தது" (தம்மபதம், புஷ்ப வர்க்கம். 12)

அறிஞருடைய ஞானமே மேன்மையானது எனக் குறிப்பிடுகிறது. அத்துடன், 'குப்பைகளில் இருந்து தாமரையும் மலர்கிறது' (மேலது, 15) என்று முன்மொழிகிறது. இவ்வாறு தாவர இனம் மெய்யியல் தேட்டத்திற்கு அடிப்படையாகிறது.

**விலங்கு, பறவை முதலியன**

'காக்கையின் பண்பை உயர்வாகப் போற்றும்'(குறள். 527) திருக்குறள், புலனடக்கத்துக்கு ஆமையை முதன்மையாகக் காட்டுகிறது (குறள்.126). அதாவது ஆமை, அடக்கமுடைமையின் குறியீடாக அமைகிறது. தம்மபதம், 'இல்வாழ்வில் பற்றில்லாதவர் அன்னப்பறவையைப்போல' (தம்மபதம், அர்ஹந்தவர்க்கம். 2)என்றும் 'பொருளாசையை விட்டு கட்டுப்பாட்டுடன் நிர்வாண மோஷம் நோக்கி இருப்பவர் வானில் பறக்கும் சுவடற்ற பறவைகள் போல' (மேலது. 3) என்றும் குறிப்பிடுகிறது. இத்துடன், 'பழகிய குதிரை, யானையை விட தன்னை அடக்கியவனே மேலானவன்' (மேலது,

நாகவர்க்கம்.3) இந்நிலையில், புலனடக்கம், உலகப் பற்றுகளில் இருந்து வெளியேறுதல் என்பதற்கு உயிரினங்களின் செயல்கள் உவமமாக அமைகின்றன.

"திறமையுள்ளவனும் உடன் வருபவனும் நல்வாழ்வு வாழ்பவனுமாகிய தோழன் வாய்க்காத போது, அயலான் வென்ற நாட்டை விட்டு அகலும் அரசனைப் போன்றும் யானைக் காட்டிலே தனியே திரியும் யானையைப் போன்றும்தனியே செல்க" (தம்மபதம் அல்லது அறவழி: 328) என்று தம்மபதம் யாரையும் எதிர்ப்பார்க்காமல் கொள்கைப் பிடிப்புடன் செயல்பட வேண்டும் என்பதற்கு யானையை உவமையாகக் கூறுகிறது. இவ்வாறு தாவர, விலங்கினங்கள் மெய்யியலாக்கத்திற்கு அடிப்படைகளாகின்றன.

**தாழ்வு**

தாவர விலங்கினங்கள் உயர்வு நிலையில் மட்டுமின்றி தாழ்வு நிலையிலும் முன்வைக்கப்படுகின்றன. அவை, அவ்வாறு இருக்க வேண்டாம் என்கிற அறவுரை நிலையில் அமைகின்றன. திருக்குறள், 'தீயபண்புகளை, பகைகளை முள்மரம் எனக் குறித்து, அவற்றை இளமையிலேயே களையவேண்டும்'(குறள். 879) என்கிறது.அத்துடன்,

"அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரந்தளிர்த் தற்று" (மேலது. 78)

என அன்பில்லாத வாழ்க்கை, பாலைநிலத்தில் பட்டமரம் தளிர்த்ததைப்போல என்கிறது. பட்டமரம் ஒருபோதும் தழைக்காது. அதைப்போல, அன்பில்லாத வாழ்க்கை பட்ட மரம் எனக்கூறி, அன்பே முதன்மையானது என்பதை வலியுறுத்துகிறது. அதைப்போலவே, 'உரமற்றவர்களை மரமென்றும்' கூறுகிறது (மேலது. 600). தம்மபதம், 'சிற்றின்பவாழ்விலும் ஆக்கமற்றிருப்பவனைப் பலமற்ற மரமெனக்கூறி, மன்மதன் எனும் சூறாவளி வீழ்த்திவிடும்' (தம்மபதம், யமகவர்க்கம்: 7) என்கிறது. அத்துடன்,

"பிக்குகளே ஒரு மரத்தை மட்டும் வெட்டி வீழத்தாதீர்கள். ஆசையாகிய காடு முழுவதையும் வெட்டித் தள்ளுங்கள். ஆசையாகிய காட்டிலிருந்து ஆபத்து உண்டாகிறது. ஆகவே, காடுமுழுவதையும் புதர்களோடு வெட்டிக் காட்டை ஒழியுங்கள்" (மேலது, மார்க்கவர்க்கம்: 11)

என்று ஆசையைக் காட்டோடு இணைத்து, அதை அழிக்கச் சொல்கிறது. மிகுதியான ஆசைகள் காடாகப் பெருகிக் கிடக்கின்றன. அவற்றை எல்லாம் அடியோடு ஒழிக்க வேண்டும். அப்போதே ஞானம் பிறக்குமென்கிறது. பனுவல்கள், இவ்வாறு இயற்கை உயர்வு நிலையில் மட்டுமின்றி தாழ்வு நிலையிலும் அமைந்து மெய்யியல் மேன்மையை முன்வைக்கின்றன .

**முடிவுரை**

திருக்குறள், தம்மபதம், தாவோதேஜிங் ஆகிய மூன்று மெய்யியல் பனுவல்களுக்கிடையிலான ஒற்றுமையாக இயற்கையை முதன்மைப்படுத்தும் போக்கு அமைகிறது. இவை இறைக்கருத்தாக்கத்தை முதன்மைப் படுத்தவில்லை. சமணமும், பௌத்தம் இரண்டிலும் அவ்வாறான போக்கு இல்லை. தாவோதெஜிங்கிலும் அக்கருத்து முதன்மைபெறவில்லை. எனவே இந்நிலையில் இம்மூன்று பனுவலும் தமது மெய்யியல் பார்வையை, இந்த மனித உடல்மீது, மனத்தின் மீது, வாழ்வின்மீது கட்டப்பட்ட பல்வகையான ஆதிக்கக் கருத்தாக்கங்களின் சிக்கல்களை எடுத்துரைத்து, வழக்கமான ஏற்றத்தாழ்வுகளாலான பொதுமனிதரை அதிலிருந்து நீக்கி, உயர்மனிதராக்கி, மனித சமத்துவ, உயிர்ச் சமத்துவ, உயர்வாழ்வை நோக்கி நகர்த்தும் நிலையில் அமைந்துள்ளன. அந்த வகையில் பொதுமனிதக் கருத்தாக்கத்தை விசாரனைக்குட்படுத்தி உயர்மனிதராக்கும் மெய்யியல் பனுவல்களாக அமைகின்றன. அந்த உயர் மனிதர் என்பவர் மனிதத் தன்மையில் இருப்பவரல்ல. மனிதப் பண்பிலிருந்து இயற்கையின் பண்பில் வேறுபாடற்று தன்னைக் கரைத்துக் கொள்பவர், இயற்கையின் மயமாக மாறிவிடுபவர். அத்தகைய தன்மையையே பயன்மரம், ஊருணி, பேரா இயற்கை என மாறுபவர் எனத்திருக்குறளும் நிலவாக ஒளிர்பவர் என தம்மபதமும் நீராக, பள்ளத்தாக்காக 'தே'வின் மயமாக இருப்பவர் எனத் தாவோதேஜிங்கும் குறிப்பிடுகின்றன. இங்கெல்லாம் மனிதப் பண்பு என முன்பே முன்வைக்கப்பட்டவைகளைக் கீழிறக்கி, இயற்கை நிலைக்கு உயர்த்தலே மெய்யியல் தேட்டமாக அமைகிறது. மனிதரை உயர்வாக்கி, இயற்கையை நுகர்வாகப் பார்க்கும் இன்றைய தீவிரமான நோக்கு நிலையைக் கீழிறக்கி, இயற்கையாக மாறுவதையே உயர்வாக்குகின்றன இப்பனுவல்கள். அந்தவகையில், திருக்குறள், தம்மபதம், தாவோதேஜிங் மூன்று மெய்யியல்

பனுவல்களும் இயற்கையை மையமிட்டுத் தமது மெய்யியல் தேட்டங்களை முன்வைக்கின்றன. இந்நிலையில் மூன்று பனுவல்களும் இயற்கையின் வழிப்பட்ட மெய்யில் பனுவல்களாக ஒன்றிணைந்து அமைகின்றன. இவ்வாறான கீழைத்தேய மெய்யியல் பார்வைகளை இன்றைய உலகிற்கான நெறிகளாக ஒருங்கிணைத்து வளர்த்தெடுத்து முன்வைக்க இயலும்.

**துணைநூல் பட்டியல்**

1. தம்மபதம், பிக்கு சோமானந்தா (மொழிபெயர்ப்பாளர்), மஹா போதி சங்கம், எழும்பூர், சென்னை.
2. தம்மபதம் அல்லது அறவழி, வ.உ.சி. நூலகம், சென்னை, 2005.
3. தாவோதேஜிங், லாவோட்சு, சி.மணி (மொழிபெயர்ப்பாளர்), க்ரியா வெளியீடு, சென்னை. மே 2016 (மறுபதிப்பு).
4. திருக்குறள் உரைக்கொத்து அறத்துப்பால், வெள்ளைவாரணம், தா.ம., (பதிப்பாசிரியர்), காசிமடம் வெளியீடு, திருப்பனந்தாள்.1993.
5. திருக்குறள் உரைக்கொத்து பொருட்பால், சிவப்பிரகாசம். அர., (பதிப்பாசிரியர்), திருப்பனந்தாள் காசிமடம் வெளியீடு, 2002
6. மருதநாயகம், பெ.,பிறமொழி இலக்கியங்களில் தமிழிலக்கியங்களின் தாக்கம், தமிழ்ப்பேராயம், இராமசாமி நினைவுப் பல்கலைக்கழகம், சென்னை: 2014.